விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 29 சனி 14.08.2021 மலர் - 2, இதழ் - 130

# ரிசர்வ் வங்கி சாதனை



விஜயபாரதம்

ஒரு நாட்டின் அரசின் வசம் உள்ள தங்கத்தின் கையிருப்பைப் பொறுத்தே அந்த நாட்டின் பணம் அச்சிடப்படும். அப்போதுதான் பணவீக்கம் கட்டுக்குள் இருக்கும், பணத்திற்கான உரிய மதிப்பு சந்தையில் இருக்கும். அவ்வகையில், நமது மத்திய அரசின் சீரிய முயற்சிகளால் தற்போது நமது பாரத ரிசர்வ் வங்கி வசம் இருக்கும் தங்கத்தின் அளவு இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. தற்போது நம் நாட்டில் அரசின் வசம் இருக்கும் தங்கத்தின் அளவு 705.6 டன். இது ஒரு சாதனை அளவாக பார்க்கப்படுகிறது.

அண்மைக் காலமாகவே ரிசர்வ் வங்கி அதிகளவிலான தங்கத்தை வாங்கி இருப்பு வைத்து வருகிறது. நடப்பு ஆண்டின் முதல் பாதியில் மட்டுமே 29 டன் தங்கம் வாங்கப்பட்டுள்ளது. இதை அடுத்து உலகளவில் அதிக தங்கம் இருப்பு வைத்திருக்கும் 10 நாடுகளில் ஒன்றாக பாரதம் உயர்ந்துள்ளது. ரிசர்வ் வங்கியின் தங்க கையிருப்பு கடந்த 20 ஆண்டுகளில் 12 மடங்கு அதிகரித்திருப்பதாக நாடாளுமன்றத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதைத்தவிர நமது மத்திய அரசின் வசம் உள்ள அன்னிய செலவாணி கையிருப்பும் 620 பில்லியன் டாலர் என்ற அளவில் வரலாறு காணாத சாதனையை படைத்துக்கொண்டுள்ளது.

# உதயநிதியின் செயல்பாடு

சட்டசபையில் சபாநாயகருக்கும் முதல்வருக்கும் வணக்கம் தெரிவிப்பது வழக்கம். ஆனால், நேற்று சட்டமன்றத்தில், பட்ஜெட் கூட்டத்தொடரில் தி.மு.கவின் அடுத்த வாரிசாக கருதப்படும் உதயநிதி ஸ்டாலினுக்கு அமைச்சர்கள் உட்பட பல்வேறு மூத்த தி.மு.க தலைவர்கள் தங்கள் இருக்கையைவிட்டு எழுந்து வந்து பிரத்தியேக வணக்கம் தெரிவித்தனர். அவர்களுக்கு இருக்கையை விட்டு எழாமல் அமர்ந்தபடியே பதில் வணக்கம் தெரிவித்தார் உதயநிதி ஸ்டாலின். தி.மு.க மூத்த தலைவர்களின் செயல்பாடுகளும் உதயநிதி ஸ்டாலினின் அவமதிக்கும் விதமான நடவடிக்கையும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



விஜயபாரதம்

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு முக்கியம்



விஜயபாரதம்

குஜராத் தொழில்முதலீட்டாளர் மாநாட்டில் இணையம் வழியாக பேசிய பிரதமர் மோடி, 'நாம் பாரதத்தின் 75வது சுதந்திர தினத்தை கொண்டாட உள்ளோம். அடுத்து வரும் 25 ஆண்டுகள் மிகவும் முக்கியம். இந்த 25 ஆண்டுகளில் நமது பணி சூழல், வாழ்க்கைமுறை, தொழில், வணிகத்தில் மாற்றங்கள் ஏற்பட உள்ளது. தொழில்நுட்பம் வேகமாக மாறி வருகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த வளர்ச்சி அவசியம். பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொண்டு வருகிறோம். இந்த சவால்களுக்கு இடையே நமது சுற்றுச்சூழல், இயற்கை வளங்களை பாதுகாப்பது அவசியம். மக்களின் நலன்கருதி பாரதம் இதில் முக்கிய நடவடிக்கை எடுக்கும்' என தெரிவித்தார்.

# எடப்பாடி பழனிச்சாமி விமர்சனம்



விஜயபாரதம்

தமிழக பட்ஜெட் தாக்கலின் போது பேச அனுமதிக்க அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் கோரினர். அதற்கு சபாநாயகர் மறுப்பு தெரிவித்தார். இதனால் அ.தி.மு.க உறுப்பினர்கள்வெளிநடப்புசெய்தனர். பின்னர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், 'கடந்த சட்டசபை தேர்தலின்போது 505க்கும் மேற்பட்ட நடைமுறைப்படுத்த முடியாத வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக கூறி தி.மு.க ஆட்சிக்கு வந்தது. முதல் கையெழுத்து 'நீட் தேர்வு ரத்து' என்றனர். ஆனால், 100 நாட்கள் ஆகியும் எந்த தீர்வும் இல்லை. இதனால், மாணவர்களிடம் குழப்பத்தை இந்த 'விடியா அரசு' ஏற்படுத்தியுள்ளது. தமிழக அரசின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுவதாக கூறி வெற்று அறிக்கையை நிதியமைச்சர் வெளியிட்டார். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் உள்ளாட்சி தேர்தலையொட்டியும் அ.தி.மு.கவினர் மீது தி.மு.க அரசு பொய் வழக்கு போடுகிறது. பத்திரிகை சுதந்திரம் பற்றி பேசுகிறார் முதல்வர் ஸ்டாலின். ஆனால், ஆகஸ்ட் 9ம் தேதி 'நமது அம்மா' பத்திரிகை அலுவலகத்தின் பூட்டை உடைத்து சோதனை செய்துள்ளனர்' என கூறினார்.

# தேசியக்கொடி அவமதிப்பு



விஜயபாரதம்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேசியக்கொடி தினசரி ஏற்றப்படுகிறது. நேற்று காலை ஏற்றப்பட்ட தேசியக் கொடியின் மேல் பகுதியின் முடிச்சு, இறுக்கமாக கட்டப்படாததால் அவிழ்ந்துவிட்டது. இதனால் தேசியக் கொடி, கம்பத்தின் உச்சியில் இருந்து சுமார் 1 அடிக்கு கீழே தொங்கியபடி இருந்தது. இதனை ஆட்சியர் அலுவலகத்தில் யாரும் கவனிக்கவில்லை, சரிசெய்யவும் இல்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# சேவைத்துளி

மதுரையில் ஆர்.எஸ்.எஸ், கேசவசேவா கேந்திரம் சார்பாக இலவச அவசர மருத்துவ அவசர ஊர்தி துவக்க விழா எஸ்.எஸ் காலனி, கேசவ நிவாஸில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மதுரை மாவட்ட ஆர்.எஸ்.எஸ் தலைவர் சந்திரன் தலைமை தாங்கினார். ஆர்.எஸ்.எஸ். அகில பாரத வியவஸ்தா ப்ரமுக் மங்கேஷ் பேண்டேஜி அவசர மருத்துவ ஊர்தியை சேவையை துவங்கி வைத்தார். இதில் கா.ஆறுமுகம், மங்கள முருகன், ப்ரஷோப குமார் உள்ளிட்ட பல்வேறு ஆர். எஸ்.எஸ் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



விஜயபாரதம்

# பாதிரிகளுக்கு வருமான வரி

ஆங்கிலேயர்கள் ஆண்ட 1944 காலம் முதல் கத்தோலிக்க பாதிரி, கன்னியாஸ்திரிகளான எங்களுக்கு வருமான வரி கிடையாது. அதை 2014ல் அரசு மாற்றி எங்களையும் வரி கட்ட சொன்னது. அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றோம். கேரள உயர் நீதிமன்றமும் 'அரசின் அந்த அறிக்கை சரியே, உங்களின் புனிதநூல் சட்டம் நாட்டின் சட்டத்துக்கு மேம்பட்டதில்லை, அதற்கு உட்பட்டதே. எனவே, நீங்கள் வரி கட்ட வேண்டும்' என இரு தினங்களுக்கு முன், கூறிவிட்டது. அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முறையிடப் போகிறோம் என கூறியுள்ளனர் பாதிரிகளும் கன்னியாஸ்திரிகளும். தாங்கள் வரி கட்ட வேண்டாம் என்பதற்கு அவர்கள் சொல்லும் காரணம், "எங்கள் புனித நூல் சட்டப்படி (Canon Law), நாங்கள் 'நிரந்தர ஏழ்மையை ஏற்றுக் கொள்ள' சபதம் எடுத்திருக்கிறோம். பைபிள் சட்டமும் எங்களை 'இறந்தவர்களாக' (civil death / Obsolete) கருதுகிறது' என்பது. அதனால் எங்களிடம் அரசு வரி வசூலிக்க கூடாது என்பது!!!. இது குறித்து கருத்து தெரிவித்துள்ள இணையதளவாசிகள், உங்கள் கூற்று உண்மை எனில், இறந்தவருக்கு எதற்கு சம்பளம், புனிதநூலில் உலகம் 'தட்டை' என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதற்காக அது உண்மையாகிவிடுமா? என பல கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

விஜயபாரதம்



# புலம்பும் ராகுல்



விஜயபாரதம்

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, டுவிட்டரில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான ஒரு சிறுமியின் குடும்பத்தின் அடையாளத்தை வெளிப்படுத்தினார். அது போக்சோ சட்டப்படி குற்றம் என்பதால் அவரது டுவிட்டர் கணக்கு தற்காலிகமாக டுவிட்டரால் நிறுத்தப்பட்டது. இது குறித்து யூடியூபில் கருத்துத் தெரிவித்த ராகுல், தன் மீது தவறே இல்லை என்பதைபோல காட்டிக்கொண்டார். டுவிட்டரில் தன்னை பின்தொடரும் 2 கோடி பேரின் கருத்துரிமையை மறுக்கும் செயல். அரசின் கைப்பாவையாக டுவிட்டர் மாறிவிட்டது, தனது கணக்கை நிறுத்துவது நியாயமற்றது, டுவிட்டர் ஒரு நடுநிலை தளம் அல்ல, முதலீட்டாளர்களுக்கு, இது ஆபத்தான விஷயம், இது டுவிட்டரின் ஆபத்தான விளையாட், இது பின்விளைவுகளை இது ஏற்படுத்தும் என டுவிட்டரை மிரட்டும் தொணியிலும் பேசியுள்ளார்.

# 15 கோடி பேருக்கு கல்வியறிவு இல்லை



விஜயபாரதம்

சி.ஐ.ஐ., எனப்படும் இந்திய தொழிற்சாலைகள் கூட்டமைப்பின் ஆண்டு கூட்டத்தில், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசியபோது 'நாட்டில் 3 முதல் 22 வயதுக்குட்பட்டவர்களின் எண்ணிக்கை 50 கோடிக்கு மேல் உள்ளது. ஆனால், அரசு தனியார் பள்ளிகள், உயர் கல்வி நிறுவனங்கள் என அனைத்து கல்வி நிறுவனங்களிலும் சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை 35 கோடிதான். எனவே, 15 கோடிக்கும் அதிகமானோர் அடிப்படை தேவையான எழுத்தறிவு உட்பட முறையான கல்வியறிவு பெறாமல் உள்ளனர். அவர்களையும் கல்வியறிவு பெற வைக்க வேண்டும் என்பதே அரசின் லட்சியம்' என தெரிவித்தார்.

# நக்ஸலைட் கைது



விஜயபாரதம்

சத்தீஸ்கரின் எல்லையை ஒட்டியுள்ள மத்திய பிரதேசத்தின் பாலகாட், மாண்ட்லா மாவட்டங்களில், கம்யூனிச நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள் சமீபகாலமாக அதிகரித்துள்ளது. இப்பகுதிகளில் மாவோயிஸ்டுகள் தங்கள் ஆதிக்கத்தை அதிகரிக்க விரும்புகின்றனர். எனினும், காவல்துறையின் இடைவிடாத விழிப்புணர்வு பிரச்சாரம் காரணமாக அவர்களின் திட்டங்கள் தடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், கடந்த புதன் கிழமை அன்று பால்காட் மாவட்டம் ஜெய்ராசி கிராமத்தில் நக்சலைட்டுகளுக்கும் காவல்துறையினருக்கும் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் கத்தியா மோச்சா பிரிவை சேர்ந்த முக்கிய நக்சலைட் சந்தீப் என்ற லகு குஞ்சம் என்ற முக்கிய நக்சலைட் கைது செய்யப்பட்டான். அவனது மற்ற நான்கு கூட்டாளிகளும் அங்கிருந்து தப்பினர். சத்தீஸ்கர், மகாராஷ்டிராவைச் சேர்ந்த சுமார் 100 மாவோயிஸ்டுகள் பாலகாட், மாண்ட்லா காடுகளுக்குள் பதுங்கியிருக்கலாம் என உளவு அமைப்புகள் கடந்த ஜனவரி மாதத்தில் தெரிவித்துள்ளன.

# கிராமங்கள் செழிக்க சுய உதவிக் குழுக்கள்



விஜயபாரதம்

வீடியோ கான்பரன்ஸ் முறையில் நான்கு லட்சம் சுய உதவி குழுக்களுக்கு 1,625 கோடி ரூபாய் உதவிகளை வெளியிட்ட பிரதமர் மோடி, அவர்களுடன் கலந்துரையாடினார். அப்போது அவர், 'கொரோனா காலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது. பெண்களின் சக்தியை இதற்கு முன்பான இருந்த அரசுகள் சரியாக அங்கீகரிக்கவில்லை. தற்போது வங்கிக் கணக்கு, சமையல் எரிவாயு என பெண்களுக்கு பல்வேறு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது நாடு முழுதும் 70 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில் 8 லட்சம் பேர் இணைந்துள்ளனர்' என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திண்டுக்கல் மாவட்டம் என். பஞ்சம்பட்டி ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மையில் பாலிதீன் மறுசுழற்சியில் ஈடுபட்டுள்ள மகளிர் கூட்டமைப்பை சேர்ந்த ஜெயந்தி குழுவினரும் பங்கேற்றனர். 1 கிலோ பாலிதீன் கழிவுகளை ஐந்து ரூபாய்க்கு வாங்கி மதிப்பு கூட்டுப் பொருட்களாக உற்பத்தி செய்வது, 32 டன் பாலிதீன் கழிவுகளை சேகரித்து, அரசின் தார் ரோடு பணிக்கு கொடுத்தது உள்ளிட்ட தங்களது பணி குறித்த கருத்தை பகிர்ந்துகொண்டனர். அவர்களுக்கு தமிழில் 'வணக்கம்' என கூறி 'வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, வருமான நோக்கு மட்டுமில்லாமல் சமூகம் சார்ந்த அக்கறையுடன் பணியை மேற்கொள்வதற்கு பாராட்டுகள்' மோடி வாழ்த்திப் பேசினார்.

# கொரோனா சாதாரணமாகிவிடும்



விஜயபாரதம்

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக அமெரிக்கா, நார்வேயை சேர்ந்த குழுவினர் ஆய்வு ஒன்றை நடத்தி உள்ளனர். இந்த ஆய்வின் முடிவுகள் ‘சயின்ஸ் அட்வான்சஸ்’ பத்திரிகையில் வெளியானது. அதில், 'கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி, வெளிப்பாடு மூலமாகவோ பெரியவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி பெற்றுள்ளனர். எனவே இந்தத் தொற்று இனி இளம்குழந்தைகளுக்கு மாறக்கூடும். குழந்தைகளுக்கும் கொரோனா தீவிரம் குறைவாகவே உள்ளது. நீடித்த நோய் எதிர்ப்புச்சக்தியால் வயதானவர்கள் புதிய நோய்த்தொற்றில் இருந்து பாதுகாக்கப்படுவார்கள். நோய் எதிர்ப்புச்சக்தியை விட தடுப்பூசியால் வலுவான பாதுகாப்பு ஏற்படுகிறது. அடுத்த சில ஆண்டுகளில் மற்ற பொதுவான ஜலதோஷ வைரஸ் போல கொரோனா வைரஸ் மாறிவிடும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹிந்து அலுவலகங்களுக்கு மிரட்டல்

பஞ்சாப் மாநிலத்தில், ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க அலுவலகங்கள், மற்ற ஹிந்து அமைப்புகளின் அலுவலகங்கள், ஹிந்து வழிபாட்டுத் தலங்களைத் தாக்க காலிஸ்தான் பயங்கரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனையடுத்து, பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அமிர்தசரஸில் உள்ள பாரத பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்து சமீபத்தில் ஒரு பெரிய ஆயுதக் குவியல் மீட்கப்பட்டது. சில நாட்களுக்கு முன், டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரை சந்தித்த பஞ்சாப் முதல்வர் கேப்டன் அமரீந்தர் சிங் ஒரு அறிக்கையில், 'பாகிஸ்தான் ஆதரவு பெற்ற பயங்கரவாத அமைப்புகளால் பஞ்சாப்பிற்கும் தேசத்திற்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உள்ளன. அவர்கள் விவசாய போராட்டத்தினை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர்' என தெரிவித்தார். 'இதற்காக பஞ்சாப் எல்லையை ஒட்டிய ஹரியானா, இமாச்சல பிரதேசம், ராஜஸ்தான், புது டெல்லி, சண்டிகர், உத்தரபிரதேசத்தின் உயர் காவல் அதிகாரிகளின் கூட்டுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எல்லையோர கிராமங்களில் சிறப்பு பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்' என பஞ்சாப் காவல்துறை தலைமை இயக்குனர் தினகர் குப்தா கூறினார்.



விஜயபாரதம்

# பத்திரிகையாளர் கொலையில் ஜிஹாதிகள்



விஜயபாரதம்

கடந்த ஆகஸ்ட் 8ம் தேதி பிகாரில் மணீஷ் குமார் சிங் என்ற சுதர்ஷன் தொலைக்காட்சி நிருபர் கொல்லப்பட்டார். அவரது உடல் ஒரு நீர் நிலையில் இருந்து காயங்களுடன் மீட்கப்பட்டது. இது தொடர்பாக, முகமது அர்சாத் ஆலம், அமரேந்திர சிங் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து சுதர்சன் தொலைக்காட்சி தலைமை நிர்வாக அதிகாரி சுரேஷ் சாவன்கே எழுதியுள்ள கடிதத்தில், 'பங்கா மசூதி குண்டு வெடிப்பு, தர்பங்கா பார்சல் குண்டு, சிவான் குண்டுவெடிப்பு ஆகிய மூன்று ஜிஹாதி குண்டு வெடிப்புகள் குறித்து மணீஷ் குமார் சிங் புலன்விசாரணை செய்துவந்தார். இதனால் அவருக்கு முஸ்லிம் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகமானது. அவரது விசாரணையை தடுக்கும் நோக்கில் இந்த கொலை நடந்திருக்கலாம். அவருக்கு மட்டுமல்ல, சுதர்ஷன் தொலைக்காட்சி பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் ஜிஹாதி அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன' என தெரிவித்தார்.

# அன்சார் கான் நிரபராதி



சி.ஏ.ஏ தொடர்பாக டெல்லியில் முஸ்லிம்கள் நடத்திய வன்முறை கலவர வழக்கில் அன்சார் கான் என்பவரின் வீட்டின் மொட்டை மாடியில் இருந்து வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டார். அவர் தான் நிரபராதி என சத்தியம் செய்தார். இதனால், சந்தேகம் கொண்ட டி.சி.பி பிரமோத் குஷ்வாஹாவின் உத்தரவின் பேரில் காவல்துறை அவ்வழக்கை புலனாய்வு செய்தது. அதில் கானின் பக்கத்து வீட்டுக்காரரான முஜம்மில் அல்வி என்பவர், பெண்களை கொடுமை உள்ளிட்ட பல்வேறு தவறுகளை செய்துவந்தார். இந்த குற்றச்சாடுகளை விசாரிக்க வேண்டும் என ஜமாத்தில் கான் புகார் அளித்துள்ளார். இதற்கு பழி வாங்கும் விதமாகவே அல்வி வெடிகுண்டை தன் வீட்டில் தயாரித்து கானின் வீட்டில் வைத்துள்ளார் என்பது தெரியவந்தது. விசாரணையில் முஜம்மில் அல்வியும் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். எனவே, அன்சார் கான் நிரபராதி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்

# காங்கிரஸின் ஆள்மாறாட்டம்

பாலியல் கொடுமைக்கு ஆளான சிறுமியின் குடும்ப விவரங்களை பகிர்ந்த குற்றத்தால் காங்கிரஸ் தலைவர் ராகுலின் டுவிட்டர் கணக்கு தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது. அதனால், ராகுலுக்கு ஆதரவு தெரிவிக்கிறோம் பேர்வழி என பிரியங்கா ராபர்ட் வத்ரா, சகுந்தலா சாஹு, அல்கா லம்பா ஸ்ரீனிவாஸ் என பல காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தங்களின் டுவிட்டர் பக்கத்தில் தங்களது புகைப்படத்திற்கு பதிலாக ராகுலின் படத்தையும், தங்களின் பெயரை ராகுல் காந்தி எனவும் மாற்றி வருகின்றனர். ஆனால், டுவிட்டர் விதிகளின்படி, புகைப்படம், பெயர் அல்லது பயோடேட்டாவை மாற்றுவது ஆள்மாறாட்ட குற்றம், வேண்டுமென்றே மக்களை தவறாக வழிநடத்துதல் என பொருள் கொள்ளப்படும். இதனால், அவர்களது கணக்குகள் இடைநீக்கம் செய்யப்படலாம். ‘இது குறித்து ஏதும் தெரியாமல் தங்களது தலைவரை போலவே சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கின்றனர் இவர்கள்’ என நெட்டிசன்கள் கிண்டல் செய்து வருகின்றனர்.

விஜயபாரதம்



# வலையில் சிக்கிய மீம்கள்

போற போக்க பாத்தா PTRருக்கு தமிழ் சொல்லி கொடுக்க வைரமுத்து தலைமைல நம்ம காசுலயே ஒரு குழு அமச்சிடுவானுக போலடா கோபி





உங்களை எங்கேயோ
பார்த்த மாதிரி இருக்கே ?
Facebook ல இருக்கீங்களா ? இல்ல
Whats app ல ? இல்ல
Twitter ல ? இல்ல
Skype ல ? இல்லவே இல்ல.
அப்புறம் ? உங்க வீட்டு மாடியில் தான்
2 வருசமா வாடகைக்கு இருக்கேன்.

# தமிழக பட்ஜெட் - ஒரு பார்வை



விஜயபாரதம்

அடுத்த 8 மாதங்களுக்கான தமிழக பட்ஜெட்டை சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் நிதியமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன். இந்த பட்ஜெட்டை போடவா 100 நாட்கள் தேவைப்பட்டன, நடுவில் அவசர கதியில் ஒரு வெள்ளை அறிக்கை வேறு, அதுவும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யாமல் நேரடியாக ஊடகங்களில்!? என சிந்திக்க வைத்துள்ளது இந்த பட்ஜெட்.

மசூதிகள், தேவாலயங்களை புதுப்பிக்க ரூ. 6 கோடி நிதி ஒதுக்கீடு, தொழில் நிதி உதவி திட்டத்தின் கீழ் 7,000 சிறுபான்மையினர் பயன் பெற நடவடிக்கை, தமிழ்நாடு வக்பு வாரியத்தின் நிர்வாகத்தை வலுப்படுத்தி, அச்சமூகத்திற்கு சொந்தமான வக்பு சொத்துக்களை அரசு பாதுகாக்க முடியும் என தங்களது சிறுபான்மையினர் பாசத்தை வெளிப்படுத்தியுள்ளது தி.மு.க அரசு.

பட்ஜெட்டில் ஹிந்து கோவில்களுக்கும் சில அறிவிப்புகள் உள்ளது. அதாவது, போதிய நிதி வசதி இல்லாத 12,959 திருக்கோவில்களில் ஒரு கால பூஜை திட்டத்தை செயல்படுத்த ரூ. 130 கோடி நிலை நிதி ஏற்படுத்தப்படும். 100 திருக்கோவில்களில் ரூ. 100 கோடியில் தேர், குளம் சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், சிறுபான்மையினருக்கு செலவழிக்கப்படுவது அரசு நிதி. ஹிந்து கோவில்களுக்கோ பக்தர்கள் அளிக்கும் நிதி ஹிந்து அறநிலையத்துறையின் வாயிலாக செலவழிக்கப்படும் என்பதுதான் வித்தியாசம். திருக்கோவில்களில் நிர்வகிக்க பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு, கோவில் நிர்வாகத்தில் தி.மு.கவினரை உள்ளே நுழைக்கும் முயற்சி என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

பெட்ரோல் டீசலுக்கு ரூ. 5 குறைக்கப்படும் என கூறிய தி.மு.க அரசு, இந்த பட்ஜெட்டில் பெட்ரோலுக்கு மட்டும் ரூ. 3 குறைத்துள்ளது. மீதி 2 ரூபாய் எப்போது குறைப்பீர்கள், டீசலுக்கு எப்போது ரூ. 5 குறைக்கப்படும் என காத்திருக்கின்றனர் மக்கள். வரி விதிப்பிற்கு குழு அமைக்கப்படும் என்பது, அனைத்து வரிகளும் விரைவில் தாறுமாறாக உயரும் என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

கூட்டுறவு நகை கடன் தள்ளுபடி அறிவிப்பு, சுய உதவிக்குழுக்களுக்கான கடன்கள் தள்ளுபடிக்கு முன்னுரிமை என்ற அரைகுறை அறிவிப்புகள் மழுப்பலாகவே தெரிகிறது. சிங்காரச் சென்னை 2.0 தொடங்கப்படும் என்பது போன்ற பல முன்னரே அறிவிக்கப்பட்ட திட்டங்கள், ஏதோ புதியதாக அறிவிப்பதைபோல மீண்டும் பட்ஜெட் உரையில்

சேர்க்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு இந்தாண்டும் இல்லை.

சென்னை குமரி இடையே 8 வழிச்சாலை அமைக்கப்படும் என்ற நிதியமைச்சரின் பட்ஜெட் அறிவிப்பு, மத்திய அரசின் சேலம் 8 வழி சாலையை முடக்க தி.மு.க நடத்திய நாடகங்களை நினைவூட்டின. மக்களின் விவசாய நிலங்களை கையகப்படுத்தாமல் இவர்கள் எப்படி 8 வழி சாலையை அமைப்பார்கள், அப்போது மக்கள் போராட மாட்டார்களா அல்லது இத்திட்டம் அறிவிப்பாக மட்டுமே இருக்குமா? என பொறுத்திருந்து பார்ப்போம்.

இடைநிலை அறிக்கையில் கல்வித்துறைக்காக ரூ. 35,104 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது அது தற்போது ரூ. 32,599 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. கல்விக்கடன் தள்ளுபடி, உயர்கல்விச் சலுகை பற்றி எந்த அறிவிப்பும் இடம்பெறாதது ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

'பெட்ரோல் விலை உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம்' என திரும்ப திரும்ப சொல்லிவருகிறார் நிதியமைச்சர். ஆனால், 100 ரூபாயில் மாநில அரசின் பங்கு என்ன, மத்திய அரசின் வரிகள் எவ்வளவு, அதில் எத்தனை சதவீதம் மாநில அரசின் மேம்பாட்டுத் திட்டங்கள், வளர்ச்சி திட்டங்களுக்கு மீண்டும் திரும்ப தரப்படுகிறது என்ற உண்மையை மட்டும் சொல்ல மறுக்கிறார்.

மத்திய அரசின் ஜல் ஜீவன், ஸ்மார்ட் சிட்டி, அம்ருத் திட்டம், ஸ்வச் பாரத் உள்ளிட்ட பல திட்டங்களை ஏதோ தி.மு.க அரசின் திட்டங்கள் போன்றதொரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முயன்றுள்ளார் நிதியமைச்சர். இது மத்திய அரசின் திட்டத்திற்கு தனது ஸ்டிக்கரை ஒட்டிக்கொள்ளும் தி.மு. கவின் வழக்கமான முயற்சியே என்று இணையதளவாசிகளால் கருதப்படுகிறது. பட்ஜெட் வெளியான சில நிமிடங்களிலேயே ஏராளமான மீம்ஸ்கள் இது குறித்து வெளியாக துவங்கிவிட்டன.

இப்படியாக ஒருவழியாக தனது முதல் பட்ஜெட்டை சமர்ப்பித்துள்ளார் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன். தமிழ் கூறும் நல்லுலகில், தமிழை வளர்ப்பதாகக் கூறியே வளர்ந்தது தி.மு.க. ஆனால் அதன் அமெரிக்க ரிடர்ன் நிதியமைச்சரின் தமிழ்தான் அவர் போட்ட பட்ஜெட்டைவிட மிக மோசமாக உள்ளது.

உதாரணமாக, வரிவிதிப்பு, விரி விதிப்பு என மாறிவிட்டது. அகழாய்வு என்பது அலகாய்வு என்ற புதிய பெயரை பெற்றுள்ளது. தயார் நிலை என்பது தாயார் நிலையாகிவிட்டது. ஆழ்கடல் அலகடல் என பெயர் மாற்றம் பெற்றுவிட்டது. நில நிர்வாக ஆணையாளர் சில நிர்வாக ஆணையாளர் ஆகிவிட்டார். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். நிதி ஒதுக்கீடு குறித்த பல விவரங்கள் அவரது உச்சரிப்பால் நமக்கு புரியவே இல்லை. 2 ஆயிரத்தி 2 லட்சத்தி... என கூறினால் யாருக்குதான் புரியும்? தமிழை ஆங்கிலத்தில் எழுதி படிக்கிறாரோ என்ற சந்தேகம் வந்ததை நம்மால் தவிர்க்க முடியவில்லை.

மதிமுகன்

# இழுப்பது யார்?

ஒரு வயதான கிழவர் சில மணிநேரங்களாக ஆற்றின் மூலையில், ஒரு மீனும் கிடைக்காமல் அமர்ந்திருந்தார். அவர் அருந்திய பல பாட்டில் மதுவும் சுட்டெரிக்கும் சூரியனும் அவரைத் தலைசுற்ற வைத்தன.

அப்போது ஒரு பெரிய மீன் அவர் வலையில் வந்து, சிக்கிக்கொண்டது. அது அவரது தூண்டிலை இழுத்தபொழுது அவர் சுத்தமாக அதற்கு தயராக இல்லை. அவர் முழுவதும் நிலைத் தடுமாறிப் போனார். அவர் சமாளித்து எழுவதற்குள், அந்த பெரிய மீன் அவரை ஆற்றிற்குள் இழுத்துவிட்டது.

இந்த நிகழ்வுகளை ஒரு சிறுவன் பார்த்துகொண்டிருந்தான். அந்த வயதான கிழவர் நீரிலிருந்து வெளியே வர போராடிய பொழுது, அவன் அவனுடைய தந்தையை திரும்பிப் பார்த்துக் கேட்டான்... “தந்தையே, அந்த ஆள் மீனைப் பிடிக்கிறாரா? அல்லது மீன் அந்த ஆளை பிடிக்கிறதா?” என்று

மனிதன் இப்படித்தான் முழுவதுமாக தலைகீழாக ஆகிவிட்டான். அந்த மீன் உன்னை பிடித்துக் கொண்டிருக்கிறது அதோடு உன்னை இழுக்கிறது. நீ மீனை பிடிக்கவில்லை. அதேபோல, எங்கெல்லாம் நீ பணம் என்னும் தூண்டிலைப் பார்க்கிறாயோ, அப்பொழுது நீ நீயாகவே இருப்பதில்லை உடனேயே நீ அனைத்தையும் மறந்துவிடுகிறாய் உன் வாழ்வின் உள்ளார்ந்த மதிப்புகளை உன்னுடைய மகிழ்ச்சியை, உன்னுடைய ஆனந்தத்தை, உன்னுடைய சந்தோஷத்தை நீ பணத்திற்காக அடமானம் வைக்கிறாய். இறுதியில் அதில் நீ உன்னையே தொலைத்துவிடுகிறாய். மரணம் வந்து தழுவிச் சென்று விடுகிறது.

விஜயபாரதம்



விஜயபாரதம் தேசிய வார இதழ்
சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .
93613 99006

# நுணலும் தன் வாயால் கெடும்



விஜயபாரதம்

காட்டில் ஒரு சிங்கம், ஒரு ஆட்டை அழைத்தது. ''என் வாய் நாறுகிறதா என்று பார்த்துச்சொல்,'' என்று கேட்டது.

ஆடு முகர்ந்து பார்த்துவிட்டு, 'ஆமாம்,நாறுகிறது.'என்று சொல்லிற்று.

உடனே சிங்கம், ''முட்டாளே,உனக்கு எவ்வளவு திமிர்,''என்று கூறி அதன் மீது பாய்ந்து குதறியது.

அடுத்து சிங்கம் ஒரு ஓநாயை அழைத்து அதனுடைய கருத்தைக் கேட்டது.

ஓநாய்முகர்ந்து பார்த்துவிட்டு, ''கொஞ்சம் கூட நாறவில்லை,''என்றது.

சிங்கம், ''மூடனே,பொய்யா சொல்கிறாய்?'' என்று கூறி அடித்துக் கொன்றது. பின்னர் ஒரு நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது.

நரி சொன்னது, ''நாலு நாளா கடுமையான ஜலதோஷம். அதனால் எனக்கு ஒரு வாசனையும் தெரியவில்லை.''

சிங்கம் நரியை விட்டுவிட்டது. புத்திசாலிகள் ஆபத்துக் காலத்தில் வாயைத் திறக்க மாட்டார்கள்.

## அன்றும் இன்றும்




